உ
கடவுள் துணை.
செந்தமிழ்.
தொகுதி—சச.] விய-ளூ தை-மீ [பகுதி. ௩.
Vol. 44. January—February 1947. No. 3.

கொல்லம் ஆண்டு

:(o):

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள்,
ஆசிரியர், அண்ணமலைபல்கலைக்கழகம்.

இந்நாளில் கிறிஸ்தவாப்தம் நம்நாட்டில் வழங்கிவருதல்போல முற்காலத்தில் சகாப்தம் கலியப்தம் என்பன வழங்கிவந்தன என்பது கல்வெட்டுக்களாலும் செப்பேடுகளாலும் அறியப்படுகின்றது. மலைமண்டலமாகிய மலையாளதேயத்தில்மாத்திரம் கொல்லம் ஆண்டு முன்னர் வழங்கிவந்தமையோடு இக்காலத்தும் வழங்கிவருகின்றது. இக்கொல்லம் ஆண்டு, எப்போது எங்ஙனம் தொடங்கியது என்பதைப்பற்றி ஆராய்ச்சிகள் நிகழ்த்திய அறிஞர்கள் ஒரு முடிவிற்கு வந்துள்ளனர். அஃது, அறுபத்துமூன்று அடியார்களுள் ஒருவரும், சேரநாட்டில் திருவஞ்சைக்களத்தில் வீற்றிருந்து செங்கோல்செலுத்திய முடிமன்னரும், சிவபெருமான்மீது திருக்கைலாய ஞான உலா, பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் பிரபந்தங்கள் இயற்றியவரும் ஆகிய சேரமான்பெருமாள்நாயனார் தம் ஆட்சியைவிட்டுநீங்கிக் கயிலாயஞ் சென்ற ஆண்டாகிய கி. பி 825 முதல்தான் கொல்லம்ஆண்டு மலைமண்டலத்தில் வழங்கத்தொடங்கியது என்பதேயாம். ஆனால், அந்நாட்டிற் காணப்படும் கல்வெட்டுக்களை ஆராயுமிடத்து, கொல்லம் ஆண்டின் வரலாறு அன்னோர்முடிபிற்கு முரணாக உளது. அன்றியும், அக்கல்வெட்டுக்களில், கொல்லம் ஆண்டு வரையப்பெற்றிருப்பதோடு அது தோன்றியமைக்குக் காரணமும் காணப்படுகின்றன. அவற்றுள், இருகல்வெட்டுக்களை அடியிற் காண்க.

I

(1) ஸ்வஸ்திஸ்ரீ கொல்லந்தோன்றி யிருநூற்றைம்பத்திரண்டாமாண்டு நாஞ்சிநாட்டதியனூரான அழகியபாண்டியபுரத்து கண்ணன்தேவனான உத்தமபாண்டியச்சிலை செட்டியேன் இந்நகரத் (2) தே ... ... விலைகொண்டுடைய பூமி கொட்டியார் குளத்தில் தெற்கடைந்த நெடுங்கண்ணும் மேலைத்தடியும் பேய்கோட்டில் நீர்பாய்கின்ற காலுக்கு வடக்கும் பிராயோடுகுழிக்கு மே (3)ற்கும் மாப்பாண்டி வயக்கலுக்குத் தெற்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட பூமி இந்நகரத்துப் பவித்திரமாணிக்க விண்ணகரெம்பெருமானுக்கு நித்தம் நானாழியரிசி திருவமுதுக்குச் சந்திராதித்தவரை செல்வதாக வைச்சுக்கொடுத்தேன் கண்ணன் (4) தேவனான உத்தமபாண்டியச்சிலைசெட்டியேன்.

(Travancore Archaeological Series, Vol. III, p. 57.)

II

(1) ஸ்வஸ்திஸ்ரீ கொல்லத்தோன்றி இருநூற்றுத் தொண்ணூற்றொன்பதாமாண்டு மிதுனத்தில் வியாழன் நின்ற ஆண்டு நாஞ்சிநாட்டதியனூரான அழகியபாண்டியபுரத்து நகரத்தோம் இந்நகரத்துத் திருமேற்கோயில் பவித் (2) திரமாணிக்க விண்ணகரெம்பெருமானுக்கு இந்நகரத்தோம் சந்திராதித்தவரை செல்வதாக நீர்வார்த்துக்கொடுத்த நிலமாவது (Ibid, p. 58).

இக்கல்வெட்டுக்களால் புதியகொல்லம் அமைக்கப்பெற்ற ஆண்டுமுதல்தான் கொல்லம் ஆண்டு வழங்கத்தொடங்கியது என்பது நன்கறியக்கிடக்கின்றது.

இனி, 'செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தும் தங்குறிப்பினவே திசைச்சொற்கிளவி' என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தின் உரையில் தெய்வச்சிலையார் கூறியிருப்பது கொல்லத்தைப்பற்றிய சில செய்திகளை இனிது புலப்படுத்துகின்றது. அது, 'பன்னிருநிலமாவன:—குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும் கொல்லமும் கூபகமும் சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமும் துளுவமும் குடகமும் குன்றகமும், கிழக்குப்பட்ட கருநடமும் வடுகும் தெலுங்கும் கலிங்கமும் என்று கொள்ளப்படும். இவற்றுள்,

கூபகமும் கொல்லமும் கடல்கொள்ளப்படுதலின் குமரியாற்றிற்கு வடகரைக்கண் அப்பெயரானே கொல்லமெனக் குடியேற்றினர் போலும்' என்பதாம்.

நம் தமிழ்மொழியில் கலந்துவழங்கும் திசைச்சொற்கள் எவ்வெந்நாடுகளிலிருந்துவந்துள்ளன என்பதை விளக்கவந்த உரையாசிரியர் தெய்வச்சிலையார், குமரியாற்றின் தென்கரையில் கொல்லம் என்ற நாடு முன்னர் இருந்தது என்றும், அதனைக் கடல்கொண்ட பிறகு அவ்வாற்றிற்கு வடக்கே புதியகொல்லத்தை அமைத்து மக்கள் அங்குக் குடியேறினர் என்றும் நுண்ணிதின் ஆராய்ந்து எழுதியிருப்பது அரிய உண்மைச்செய்தியாகும்.

எனவே, பழைய கொல்லம் அழிந்தபிறகு இக்காலத்துள்ள கொல்லத்தைப் புதிதாக அமைத்து மக்கள் குடியேறியகாலத்தில் தான் கொல்லம் ஆண்டு முதலில் தொடங்கியது என்பது உறுதியாதல் காண்க. இவ்வுண்மையைக் 'கொல்லந்தோன்றி இருநூற்றைம்பத்திரண்டாம் ஆண்டு' எனவும் 'கொல்லந்தோன்றி இருநூற்றுத்தொண்ணூற்றொன்பதாமாண்டு மிதுனத்தில் வியாழன்நின்ற ஆண்டு' எனவும் போதரும் கல்வெட்டுத்தொடர்மொழிகள் வலியுறுத்திநிற்றல் அறியற்பாலதாம்.

கி. பி. 822 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒரு கடல்கோளால் பழைய கொல்லம் அழிந்துவிட்டது என்றும் கி. பி. 825 ஆம் ஆண்டில் புதியகொல்லம் அமைக்கப்பெற்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே, கி. பி. 825-ல் புதிய கொல்லம் அமைக்கப்பெற்ற காலந்தான் கொல்லம் ஆண்டின் தொடக்கமாகும்.

இனி, சேரமான்பெருமாள்நாயனார் சுந்தரமூர்த்திசுவாமிகளோடு கயிலாயஞ்சென்றனர் என்பது பெரியபுராணத்தால் அறியப்படும் செய்தியாகும். ஈண்டு அவ் யாண்டு யாது என்பது ஆராயற்பாலதாகும்.

சுந்தரமூர்த்திகள் தாம் திருவாய்மொழிந்தருளிய திருத்தொண்டத்தொகையில் 'கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்குமடியேன்' என்று

கூறியிருக்கின்றனர். இவ்வடியில் வந்துள்ள 'காக்கின்ற' என்னும் நிகழ்காலப் பெயரெச்சம் காடவர்கோனாகிய கழற்சிங்கன் நம் சுவாமிகள்காலத்துமன்னன் என்பதை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. காடவர் என்பது பல்லவர்களுக்குரிய பெயர்களுள் ஒன்று. ஆகவே, இக் கழற்சிங்கன் பல்லவமன்னனாக இருத்தல் வேண்டும். அன்றியும், இவ்வேந்தன் அறுபத்துமூன்று அடியார்களுள்வைத்துச் சுந்தரமூர்த்திகளாற் போற்றப்பட்டிருத்தலாற் சிறந்த சிவபக்தனாக இருத்தல்வேண்டும்.

நம் தமிழகத்தில் அரசாண்ட பல்லவமன்னர்களுள் கழற்சிங்கன் என்ற பெயருடையவன் ஒருவனும் இல்லை. ஆனால், நரசிங்கவர்மன் என்ற பெயருடைய பல்லவஅரசர்கள் இருவர் இருந்துள்ளனர். அவர்களுள், முதல் நரசிங்கவர்மன் சிறுத்தொண்டநாயனாரைத் தன்படைத்தலைவராகக்கொண்டவன்; அவரை வடபுலத்திற்கு அனுப்பி மேலைச்சளுக்கியமன்னனாகிய இரண்டாம் புலிகேசியைப் போரில்வென்று, கி. பி. 642-ல் அவனது தலைநகராகிய வாதாபியைக் கைப்பற்றி அங்கு வெற்றித்தூண் நிறுவியவன்; அதுபற்றி 'வாதாபிகொண்ட நரசிங்கவர்மன்' என்று அந்நாளில் வழங்கப்பெற்றவன். எனவே, இவ்வீரச்செயல்களை நிகழ்த்திய முதல் நரசிங்கவர்மன் திருஞானசம்பந்தசுவாமிகள் காலத்தினன் என்பது தெள்ளிது. ஆகவே, சுந்தரமூர்த்திகள் அவ்வரசன்காலத்தவரல்லர் என்பது திண்ணம்.

இனி, இரண்டாம் நரசிங்கவர்மன், இராசசிங்கவர்மன் என்னும் பிறிதொருபெயரும் உடையவன்; காஞ்சிமாநகரிலுள்ள இராசசிம்மபல்லவேச்சுரம் என்னும் கைலாயநாதர்கோயிலை எடுப்பித்தவன். அக்கோயிலிற் காணப்படும் இவனது வடமொழிக் கல்வெட்டொன்று இவனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்ந்துகூறுகின்றது (South Indian Inscriptions, Vol. I. No. 24). இவ்வேந்தனது பெருமையை உணர்த்தும் இருநூற்றைம்பது சிறப்புப்பெயர்கள் அக்கோயிலில் வரையப்பட்டுள்ளன. அவற்றுள், 'சங்கரபக்தன்' 'ஈசுவரபக்தன்' என்ற சிறப்புப்பெயர்கள் குறிப்பிடத்தக்கனவாகும் (S. I. I. Vol. I. No. 25 Verse 55).

அன்றியும், மகாபலிபுரம் என்று வழங்கும் மாமல்லபுரத்தில் இவ்வரசன் எடுப்பித்துள்ள இராசசிம்மபல்லவேச்சுரம் என்ற கோயிலிலுள்ள கல்வெட்டும் பனைமலைக்கோயிலிலுள்ள கல்வெட்டும் இவனைச் 'சிவசூடாமணி' என்று புகழ்ந்துகூறுதல் அறியத் தக்கது (Epigraphia Indica, Vol. XIX, No. 18 A verse 2, S. I. I. Vol. I. No. 31). காசாக்குடிச் செப்பேடுகள் பரமேசுவரனே இராசசிங்கப்பல்லவனாக அவதரித்தனர் என்று சிறப்பித்துக்கூறுகின்றன (S. I. I. Vol. II. No. 73). உதயேந்திரச் செப்பேடுகள் இவனைப்'பரமமாகேசுவரன்' என்று புகழ்ந்துரைக்கின்றன (S. I. I. Vol. II. No. 74). வேலூர்ப்பாளையச்செப்பேடுகள் இவ்வேந்தன் காஞ்சிமாநகரில் சிவபெருமானுக்குக் கயிலாயத்தை ஒத்த கோயில் எடுப்பித்த பெருமையுடையவன் என்றுணர்த்துகின்றன (S. I. I. Vol. II. No 98). எனவே, இவன் சிறந்த சிவபக்தியுடையவனாய்த் திகழ்ந்தவன் என்பது நன்கு வெளியாதல்காண்க.

இம்மன்னன் காஞ்சியில் கயிலாயநாதர்கோயில் எடுப்பித்த காலத்தில்தான் திருநின்றவூரில் வாழ்ந்த பூசலார்நாயனார் சிவபெருமானுக்கு மனக்கோயில்கட்டினாரென்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபாகும். சிவபெருமான் தாம் பூசலாரது மனக்கோயிலுக்கு முதலில் எழுந்தருளவேண்டியிருந்தமையின் அரசன் எடுப்பித்த கற்றளிக்குக் கடவுண்மங்கலஞ்செய்யக் குறிப்பிட்டிருந்த நாளை மாற்றி வேறொருநாளில் அதனைச் செய்யுமாறு கனவிற் கூறியருளினார் என்பதும் பிறவும் பெரியபுராணத்திற் காணப்படுஞ் செய்திகளாம். அக்கோயிலிலுள்ள கல்வெட்டொன்று, நற்குணங்கள் விலகிநிற்கும் கலியுகத்தில் இவன் அசரீரிவாக்கினைக் கேட்ட பெருமையுடையவன் என்று கூறுவது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது (S I. I. Vol. I. No. 24, Verse 7).

ஆகவே, இவன் ஈடும் எடுப்புமற்ற சிவபக்தனாக அந்நாளில் இருந்திருத்தல்வேண்டும் என்பது ஒருதலை. இத்துணைச் சிறந்த சிவபக்திவாய்ந்த இப்பல்லவவேந்தனே, சுந்தரமூர்த்திசுவாமிகளால் திருத்தொண்டத்தொகையில் கூறப்பெற்ற காடவர்கோன் கழற்சிங்கனாதல்வேண்டும்.

இனி, இவ்வேந்தன் இயற்பெயரால் குறிக்கப்படாமல் 'கழற் சிங்கன்' என்று அடிகளால் கூறப்பெற்றமைக்குக் காரணம் யாது என்பது ஆராய்தற்குரியதாகும்.

மாமல்லபுரத்தில் இவ்வரசன் எடுப்பித்தகோயில்களுள் ஒன்று க்ஷத்திரியசிம்மபல்லவேச்சுரம் என்ற பெயருடையதாயிருத்தலால் இவனுக்கு க்ஷத்திரியசிம்மன் என்னும் பெயரும் இருந்திருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனாகின்றது. எனவே, இவன் நரசிம்மன், இராசசிம்மன், க்ஷத்திரியசிம்மன் என்ற பெயர்களையுடையவனாயிருந்தமை உணரற்பாலது. சிம்மன் அல்லது சிங்கன் என்பது அம்மூன்றுபெயர்களிலும் இறுதியில் பொதுவாக அமைந்திருத்தலால், அரசர்க்குரிய பெருமையையும் வீரத்தையும் அறிவிக்கும் கழல் என்னும் மொழியை அதற்குமுன் பெய்து கழற்சிங்கன் என்று சுந்தரமூர்த்திகள் கூறியுள்ளனர் என்பது தெளிவாகப் புலப்படுதல் காண்க. ஆகவே, அடிகளால் பாராட்டப்பெற்ற 'காடவர்கோன்கழற்சிங்கன்' என்பான் காஞ்சிமாநகரிலிருந்து கி. பி. 680 முதல் 705 வரையில் ஆட்சிபுரிந்த பல்லவ வேந்தனாகிய இரண்டாம் நரசிங்கவர்மனே என்பது நன்கு துணியப்படும். அடிகளோடு கயிலாயஞ்சென்ற சேரமான்பெருமாள்நாயனார் வாழ்ந்தகாலமும் அதுவேயாகும். எனவே, கொல்லம் ஆண்டு தொடங்குவதற்குச் சற்றேறக்குறைய நூற்றிருபது ஆண்டுகட்கு முன்னரே சேரமான்பெருமாள்நாயனார் தம் ஆட்சியை நீத்துக் கயிலாயஞ்சென்றிருத்தல்வேண்டும். ஆகவே, அப்பெரியார் தம் நாட்டைவிட்டுக் கயிலாயஞ்சென்ற ஆண்டில் கொல்லம் ஆண்டு தொடங்கியது என்று கூறுவது பொருந்தாதென்க.

இதுகாறும் விளக்கியவாற்றால், பழைய கொல்லம் கடல்கோளால் அழிவெய்தியபிறகு புதிய கொல்லம் அமைத்து மக்கள் அங்குக் குடியேறிய ஆண்டில்தான் கொல்லம் ஆண்டும் தொடங்கப் பெற்றது என்பது நன்கு புலனாதல் காண்க.

நன்பு

ஸ்ரீ. R. அரங்கராஜன் B.A.

கலைமகள் ஆனிமலரில் 'நண்பு' என்ற தலைப்புடன்,

''அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு''

என்ற குறளுக்கு ராஜாஜி அவர்கள் ஆராய்ச்சிசெய்து எழுதியுள்ள பதப்பொருளை அன்பர்கள் கண்டிருக்கலாம்.

மேற்குறித்த குறளின் இரண்டாவது அடியில் நண்பு என்னும் வார்த்தை நன்பு என்றிருக்கவேண்டும் என்பது அவரது கட்சி. ஆனால், தற்சமயம் இருக்கும் நண்பு என்னும் பாடமே சரியென்பதும், நன்பு என்றிருக்கவேண்டிய அவசியமில்லை என்பதும் எனது அபிப்பிராயம். இது கீழ்க்கண்ட காரணங்களால் தெளிவாகும்.

(1) இல்லறவியலுள் இல்வாழ்க்கை என்ற அதிகாரத்துக்கும், துறவறவியலுக்கும், அன்புடைமை என்ற அதிகாரத்திற்கும் பரிமேலழகர் எழுதியிருக்கும் முகவுரையை முறையே சிறிது ஊன்றி நோக்கவேண்டும்.

> "இல்வாழ்க்கை:— அஃதாவது இல்லாளோடுகூடி வாழ்தலினது சிறப்பு. இன்னிலை அறஞ்செய்தற்குரிய இருவகைநிலையுள் முதலதாதலின்" முற்கூறப்பட்டது.
>
> "துறவறமாவது மேற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையாராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின்பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம். அதுதான் வினைமாசுதீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற் பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும், அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமும் என இருவகைப்படும்".
>
> "அன்புடைமை:—அஃதாவது: அவ் வாழ்க்கைத் துணையும் புதல்வரும் முதலிய தொடர்புடையார்கட் காதலுடையனாதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிறவுயிர்கண் மேல் அருள்பிறத்தலும் அன்பின்பயனாகலின் இது

வேண்டப்பட்டது. வாழ்க்கைத்துணைமேல் அன்பில் வழி இல்லறம் இனிது நடவாமை 'அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் — துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர்சிறப்பின் — விருந்தெதிர்கோடலும் இழந்த வென்னை' என்பதனாலும், அதனால் அருள்பிறத்தல் 'அருளென்னும் அன்பீன்குழவி' என்பதனானும் அறிக'' என்றார்.

எடுத்துக்கொண்ட குறள் இல்லறவியலில் உளதாகலின் இவை வேண்டப்பட்டன. மேல்,

> ''அறத்திற்கே யன்புசார் பென்ப அறியார்
> மறத்திற்கும் அஃதே துணை''

என்ற குறளினும் 'அவனை நட்பாகக்கருதி' என்று பொருள் கூறுவார்.

இல்வாழ்வான் தனக்குத் தொடர்புடையார்மாட்டுச்செய்த அன்பின்முதிர்ச்சியால் மற்றையோரிடமும் அன்புடையனாகிறான். அதனால் நண்பர்கள் கிடைக்கப்பெறுகிறான். ''யாவரும் நண்பாதல் எல்லாப்பொருளும் எய்துதற்கு ஏதுவாகலின் அதனை நாடாச்சிறப் பென்றார்'' என்று பரிமேலழகர் விளக்கிக்கூறியிருக்கிறார். என்னை? இல்லறத்தான் தொடர்புடையார்மாட்டுக் காதலுடையனாயின் அவ்வன்பு பிறர்மேலும் செல்ல, அதனால் நண்பர்கள் கிடைக்கப்பெற்று எப்பொருளும் எய்துதற்கு ஏதுவுடையனாய் அவன்வாழ்க்கை இனிது நடைபெற்று இம்மைப்பயன் கிட்டல் காண்க. மேலும், பின்வரும் அதிகாரங்கள், விருந்தோம்பல் இனியவைகூறல் முதலாயின. வந்த விருந்தினரிடம் இன்சொல்லனாய் அவர்க்கு அன்புடன் வேண்டிய செய்தான் ஒருவனுக்கு அவர் நண்பாராதல் இயற்கை.

உரையாசிரியர்மட்டும் இங்ஙனம் கூறுகிறார். நூலாசிரியர் கருத்தும் அதுவாமோ என்னில் அங்ஙனமே என்க. அருளுடைமை, கொல்லாமை, புலான்மறுத்தல், தவம், மெய்ப்பொருள்காண்டல்: இவையெல்லாம் துறவறவியலில் வருகின்றன. இம்மைப்பயனாய புகழுடன் இல்லறஇயல் முற்றுப்பெறுகின்றது. வீடு தனித்து நூலிற் கூறப்படாமல் துறவறமாகிய காரணவகையாலேயே கூறப்படுவது.

இனி, ராஜாஜி அவர்கள் ஆதாரமாகக் காட்டியுள்ள ஆழ்வார் பாசுரத்தை நோக்குவோம். அது,

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்பது.

பெரியவாச்சான்பிள்ளை உரைப்படி அன்பு, ஆர்வம், நன்பு என்பன முறையே அன்பும், ஒரு முனைப்பட்ட பக்தியும், ஞானமும் ஆகும். அன்பின்மிகுதியால் பகவானைக் காணவேண்டும் என்ற எண்ணத்துடன் 'ஆடியாடி அகங்கரைந்து இசைபாடிப்பாடிக் கண்ணீர்மல்கி' என்றபடியாகத் தானே பக்தி மேலிடுகிறது. பின் 'புந்தியால் சிந்தியாது ஓதி உருவெண்ணும் அந்தியா லாம்பயனங் கென்' என்று பொய்கையார் கூறியபடி இறைவனைப்பற்றிய சிந்தனை மேலிடுகிறது. சிந்தனையின்வேகம் அதிகப்படவும், ஞானவிளக்கம் உண்டாவதால் பரம்பொருளைக்கண்டு வீடுபெறுகிறான். இதுவே பாசுரத்தின் உட்பொருள்.

அன்பு, ஆர்வம் என்ற இரண்டு சொற்களும் திருக்குறளிலும், பாசுரத்திலும் காணப்படுகின்றன. ஆயினும், ஆழ்வார் சிந்தையாகிய திரியிட்டு, ஞானச்சுடர்விளக்கேற்றுகிறார். இது மறுமைப் பயன் துய்க்குமாறு. இல்லறத்தான் அன்பும் ஆர்வமும் உடையனாய் நண்பரையடைகிறான். இது இம்மைப்பயன் துய்க்குமாறு.

இக்குறள் துறவறவியலில் இருந்திருப்பின் ராஜாஜி அவர்கள் கூறும்பொருள் பொருத்தமுடையது. அன்றி, இல்லறவியலில் இருத்தலால் அப்பொருள் பொருந்தாமை ஒருதலை.

சாமானியமான கருத்து என்பதால் அதை ஆசிரியர் கூறவில்லை என்பது தவறு. உதாரணமாக,

"விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது"

என்ற குறள் வள்ளுவராற் பாடப்படவில்லையென்று கூறலாமா?

மக்கள் பகைமையொழிந்து அன்புடன் வாழவேண்டும் என்பது சாமானியமாக எல்லாரும் அறிந்ததே. ஆயின் அதுவே சகல சமயங்கட்கும் அடிப்படையல்லவா? அன்பும் ஆர்வமும் இன்மையால் தமக்குள் நட்பின்றி இன்று தேசத்தில் குழப்பங்கள் மிகுதலும் காண்கிறோம். தனது மனைவிமக்கள்மேல் ஒருவன்

கொண்டிருக்கும் அன்பை மற்றவர்களிடமும் செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் மக்கள் இன்பவாழ்வை மேற்கொள்வர். தேசமும் போகபூமியாக விளங்கும். இதையே இன்று தலைவர்களும் பிரசாரம் செய்கிறார்கள். இதை 2000 ஆண்டுகட்குமுன் வள்ளுவர் கூறிப்போந்தார். இது சாரமற்றபொருள் என்று எவரே கூறுவர்?

(2) பரிமேலழகர் உரையெழுதுவதற்குமுன் சிறந்த தமிழ் நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தார். அவற்றுள் பிரபந்தமும் ஒன்று. '"திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்" என்று பெரியாரும் பணித்தார்' என்பதிலிருந்தும் இன்னும் பல மேற்கோள்களிலிருந்தும் இது பெறப்படும்.

"பிறரெல்லாம் இயைபறவுரைத்தார்" என்றும், "அவர் நோக்கிற்றிலர்" என்றும், "பிறரெல்லாம் இடர்ப்படுப" என்றும் தாம் மற்றையாசிரியர்களினின்றும் மாறுபடும் இடங்களில் தக்க ஆதாரங்களுடன் தமதுகொள்கையை நிலைநாட்டுவர் பரிமேலழகர்.

'நன்பு என்று வள்ளுவர் எழுதியிருந்து அதன் பொருள் சிக்காமல் நண்பு என்று பின்னவர் திருத்தியிருக்கலாம்' என்றும் ராஜாஜி அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆயின் நன்பு என்ற பதத்துடன் ஆழ்வார்பாசுரம்மட்டும் திருத்தப்படாமல் இன்றுவரை வந்ததெங்ஙனம்? பரிமேலழகர் அதையறிந்திருந்தும் அதிகார முறையொடு பொருந்தாமைபற்றி அங்ஙனங்கொண்டிலர்.

நன்பு என்பது நன்மை, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் முதலியனபோல (பு விகுதிபெற்ற) பண்புப்பெயர். இவை இடம்பற்றிச் சிறிதுசிறிது தம்முட் பொருள்வேறுபடினும் பெரும்பாலும் ஒருபொருள் தருவனவே. நன்பு என்பது அரிதுணர் பொருளதன்று. வடமொழி தென்மொழிக் கடல்களை நிலைகண்டுணர்ந்து, திருக்குறள், பரிபாடல்போன்ற அரும்பெருநூல்களுக்குத் திட்பநுட்பஞ்செறிந்த பேருரைவகுத்த பேராசிரியராகிய பரிமேலழகர்போல்வார்க்கு 'அச்சொல்லின்பொருள் சிக்கவில்லை' யென்பது அவர்களைக் குறைத்துமதிப்பிடுவதாகும். அதிகாரப் பொருத்தமும் மிக முக்கியம்.

மேற்கூறிய காரணங்களால் 'நண்பென்னு நாடாச்சிறப்பு' என்ற பாடமே சரியானதும் பொருள்செறிந்ததும் என்பது பெறப்படும்.

வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சம்

பண்டிதர். திரு. க. பொ. இரத்தினம்அவர்கள் B.A. (Hons.) B.O.L.,
விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரியகலாசாலை, கொழும்பு.

தமிழ்நாடு சிறந்த பல தமிழ்நூல்களை இழந்துவிட்டது: என்பதை யாவரும் அறிவர். தமிழ்மொழியில் முதன்முதலாக இலக்கியம் தோன்றியகாலத்தில் எழுந்த நூல்கள் முழுதும் மறைந்து போய்விட்டன. அதன்பின்னர் இயற்றப்பட்ட அகத்தியம் முதலிய இலக்கணநூல்களிற் பெரும்பகுதியும் சங்ககாலத்தின் முற்பகுதியிலே தோன்றிய நூல்களும் தம்பெயர் நிறுத்தித் தாம் மாய்ந்தன. இம்மட்டோ! கடைச்சங்ககாலத்துக்குப்பின்--கிறிஸ்துவுக்குப்பின்-- தோன்றிய நூல்களிற்கூடச் சில மறைந்துவிட்டன. இச்சில நூல்களில் வச்சத்தொள்ளாயிரமும் ஒன்றாகும். இந்நூல் வீரசோழியம் எழுதப்பட்டகாலத்தில் (கி. பி. பதினோராம்நூற்றாண்டளவில்) நிலைத்திருந்ததென்பது வீரசோழியவுரையாற் பெறப்படுகின்றது.

நாற்பது, ஐம்பது, எழுபது, நானூறு முதலிய குறித்த தொகையான செய்யுள்களைக் கொண்டனவாக நூல்களைச் செய்யும் வழக்கம் கடைச்சங்ககாலத்திலும் பின்னரும் இருந்ததென்பதற்கு அக்காலநூல்களே சான்றுபகருகின்றன. கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, நாலடிநானூறு முதலியன காண்க.

வச்சத்தொள்ளாயிரமும் இம்முறையிலேதான் இயற்றப்பட்டது. வச்சத்தொள்ளாயிரம் என்னும்பொழுது முத்தொள்ளாயிரம் எனும் நூல் ஞாபகத்துக்கு வராமல் இராது. வச்சத்தொள்ளாயிரத்தைப்பற்றிச் சிலவற்றையறிவதற்கு முத்தொள்ளாயிரமே வழி காட்டுகிறது. முத்தொள்ளாயிரத்திலே சேர சோழ பாண்டியர் என்னும் தமிழ்நாட்டு முடியுடைவேந்தர் மூவரையும் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு, ஒவ்வொருவர்மேலும் தொள்ளாயிரம் செய்யுள்கள் பாடப்பட்டுள்ளன. இதிலுள்ள செய்யுள்களின்மொத்தம் முத்தொள்ளாயிரமாகும். பெருக்கிக்கூறின் (900×3) ஈராயிரத்தெழுநூறு ஆகும்.

முத்தொள்ளாயிரமும் வச்சத்தொள்ளாயிரமும் பெயரளவில் மாத்திரமன்றி, கருத்து நடை முதலியவற்றிலும் ஒற்றுமையுடையனவாயிருக்கின்றன. இருநூல்களும் வெண்பாவினாலேயே பாடப்பட்டுள்ளன. இக்காரணங்களினாலே இவற்றுள் ஒருநூலை இயற்றிய ஆசிரியர் மற்றநூலைத் தழுவியே இயற்றினார் என்பது பெறப்படுகிறது. ஆனால் முதலிலே தோன்றிய நூல் யாது? என்பதற்கு விடைகூறுவதற்கு அகச்சான்று ஒன்றேனும் கிடைக்கவில்லை. எனினும், முத்தொள்ளாயிரமே காலத்தால் முந்தியதெனக்கொள்ளல் பொருத்தமுடைத்து.

புறத்திரட்டு என்னும் தொகைநூலிலே முத்தொள்ளாயிரச் செய்யுள்கள் காணப்படுகின்றனவேயன்றி வச்சத்தொள்ளாயிரச் செய்யுள் ஒன்றும் அதில் இல்லை. மேலும், தமிழ்நூல்களின் பாட்டுடைத்தலைவர்களாக முற்காலத்தில் விளங்கியவர்கள் முடியுடை மூவேந்தர்கள் வள்ளல்கள் முதலிய தமிழ்நாட்டுப் பெரியோர்களே யாவர். இடைக்காலத்திலேதான் சீவகன், உதயணன் முதலிய சமணசமயச்சார்பான வீரர்களைத் தலைவர்களாகக்கொண்டு நூல்களை யியற்றத்தொடங்கினர். முத்தொள்ளாயிரம் மூவேந்தர்களைப் பற்றிக்கூறுவதால் உதயணனைப்பற்றிக்கூறும் வச்சத்தொள்ளாயிரம் என்னும் நூலின்முன்புதான் இயற்றப்பட்டிருக்கவேண்டும். நிற்க.

வச்சத்தொள்ளாயிரம் எனும் நூலினைப்பற்றி நாம் விரிவாக அறிந்துகொள்ளமுடியாதிருக்கிறது. இதிலுள்ள 900 வெண்பாக்களில் இப்பொழுது மூன்றுசெய்யுள்களே கிடைக்கின்றன. வச்சன் என்பது உதயணனுடைய பெயர்களுள் ஒன்று. அவனுடைய நாட்டிலிருந்தே இப்பெயர் அவனுக்கு உண்டானது. இது வத்தன் வத்தவன் எனவும் வழங்கும். வச்சத்தொள்ளாயிரம் எனும் நூலுக்குப் பாட்டுடைத்தலைவன் உதயணனோ? அல்லது வச்சன் எனும்பெயரையுடைய வேறொரு அரசனோ என்பது அறியமுடியவில்லை என டாக்டர் உ. வே. சாமிநாதையர் கூறியுள்ளார். ஆனால் உதயணனே பாட்டுடைத்தலைவனாயிருக்கவேண்டும் எனக்கூறுவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவது காரணம் உதயணனைப்பற்றிக்கூறும் பெருங்கதையின் சிறப்பேயென்க.

உதயணன் தமிழ்நாட்டுத்தொடர்பற்றவன் எனினும், கொங்கு வேளிர் எனும் பெரும்புலவர் தமது பெருங்கதையிலே தமிழ்நாட்ட வரும் போற்றும்படி அவனைத் தீட்டிக்காட்டியிருக்கிறார். கொங்கு வேண்மாக்கதையிலே காணப்படும் உதயணனிடத்தில் யார்தான் உள்ளத்தைப் பறிகொடுக்கமாட்டார்?

"இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியும் மாசில் சூழ்ச்சியொடு
எண்வகை நிறைந்த"

நன்மகனாக அவன் விளங்குகிறான். பெருங்கதையின் அருமையும் பெருமையும் அறிந்து அதனை அறிஞர்பலர் போற்றிக் கற்று வந்தனர் என்பதற்கு,

"திருத்தகு மாமுனிசிந் தாமணி கம்பன்
விருத்தக் கவிவளமும் வேண்டேம்—திருக்குறளோ
கொங்குவேண் மாக்கதையோ கொள்ளேம் குவலயத்தில்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு"

என்னும் வெண்பாச் சான்றுபகர்கின்றது.

அன்றியும், உரையாசிரியர்கள் பெருங்கதையிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக்காட்டியுள்ளார்கள். உதயணனைப்பற்றிய சில குறிப்புக்களை மணிமேகலையாசிரியரும் திருமங்கையாழ்வாரும் தங்கள் நூல்களில் எடுத்தாண்டுள்ளனர். இவற்றால் உதயணன் ஒரு சிறந்த தலைவனாக மிளிர்ந்தான் என்பதும், புலவர்கள் அவனுடைய பெருமையிலீடுபட்டு அவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு பாடினார்கள் என்பதும் பெறப்படுகின்றன. உதயணகுமார காவியம் என்பது உதயணன்சரிதங்கூறும் இன்னொரு தமிழ்நூலாகும். இதைப்போலவே வச்சத்தொள்ளாயிரமும் உதயணனையே பாட்டுடைத்தலைவனாகக்கொண்டு பாடப்பட்ட நூலெனல் ஏற்புடைத்து.

இனி வச்சத்தொள்ளாயிரத்தில் மிச்சமாக இப்பொழுது கிடைக்கும் மூன்றுசெய்யுள்களையும் பார்ப்போம்.

"வாடை துளிர மருந்தறிவா ரில்லையோ
கூடல் இனியொருகாற் கூடாதோ—ஒடை
மதவா ரணத்துதயன் வத்தவர்கோ னூட்டிற்
கதவான தோதமியேன் கண்"

என்று தலைவனைப்பிரிந்த தலைவி புலம்புகிறாள். வாடைக்காற்று மிகுந்த குளிருடையது; அதன் குளிருக்காற்றாது மக்கள் வருந்துவர். ஆனால் பிரிவால் வருந்துந் தலைவியை அதனால் குளிரச்செய்ய முடியவில்லை. பிரிவின் வெப்பமிகுதியால் அந்தக் குளிர்ந்த வாடைகூட அவளுக்குச் சூடுடையதாகவே தோற்றுகிறது. சூட்டைத் தாங்கமுடியாது, அந்த வாடையைக் குளிரச்செய்ய அவள் மருந்து தேடுகிறாள். இது, "நின் பிரிவினுஞ்சுடுமோ பெருங்காடு" எனச் சீதைகூறியதன் உண்மையை நன்குவிளக்குகிறது.

"கூடலினியொருகாற் கூடாதோ" என்னுங்கூற்றுக் கேட்போருடைய மனத்தை உருக்குகிறது. கூடல் என்பதற்குச் சேர்தல் என்பதன்றிக் கூடலிழைத்தல் எனவும் கூறலாம். கணவரைப் பிரிந்த மகளிர் அவரை விரைவிற் கூடுதல் கிட்டுமோ என்பதையறியக் கூடலிழைத்தல் மரபு. கண்ணைமூடிக்கொண்டு மணலிலே கைவிரலால் வட்டமிடுவர். இந்த வட்டத்தின் கடைசிப்பகுதி முன்தொடங்கிய இடத்தில்வந்து பொருந்தினால் நினைத்த காரியங் கைகூடும்; அன்றேல் அக்காரியம் பிழைத்துவிடும் என்பது அவர் கொள்கை.

"கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவேனேற் கூடென்று—கூடல்
இழைப்பாள்போற் காட்டி இழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து"

எனும் முத்தொள்ளாயிரச்செய்யுளையும் காண்க.

பிரிவினாற் சுடப்பட்டுத் தலைவனை நினைந்துவாடும் மகளிர் நித்திரைகொள்வதெங்ஙனம்? இவர்கள் சிறிதும் தூங்காது இரவுக்குத் துணையாக இருப்பார்கள் என்பதைப் பின்வரும் திருக்குறள்களிரண்டும் மிகச் சிறப்பாகக் கூறுகின்றன.

"காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்"

"மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
என்னல்லது இல்லைத் துணை"

சிறிதேனும் கண்மூடாது இராப்பொழுதைக் கழிக்கிறாள் என்பதையே 'வத்தவர்கோன் நாட்டிற் கதவானதோ தமியேன்கண்' என்பது குறிப்பிடுகிறது.

அவளுடைய கண் ஏன் கதவாயிற்று? என்பதை,

"கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினர்—போதிற்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம்"

என்னும் நளவெண்பாச்செய்யுளால் விளங்கும். விருந்தயர்தல் இரப்போர்க்கீதல் முதலிய அறச்செயல்களை இடையறாதுசெய்தற்காக வத்தவர்கோன்நாட்டுக் கதவு ஒருபொழுதும் மூடப்படவில்லை.

* * * *

"உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னாகத் தேந்தையர்தம் பொற்றைநகச் சின்னங்கண்
டென்னகத் தேயெரிகை யால்"

என்பது இரண்டாவதுபாடல்.

தலைவனுடையமார்பில் பரத்தையருடைய நகக்குறிகள் பல இருக்கின்றன. அவற்றைத் தலைவி காண்கிறாள். அவனுடைய

மார்பிலுள்ள குறிகளைத் தன்னுடைய மார்பிலுள்ளனவாகக் கொண்டு அவற்றால் அவனுடைய மார்பு அடையும் வருத்தத்தைத் தனதுமார்பும் அடைவதாகவும், அதனால் தனது உயிரும் அவனுயிரும் ஒன்றென்பதைத் தெளிவாக அறிவதாகவும் கூறுகிறாள். எப்படி அவள் மறைத்துக்கூறினும் அவளது உள்ளக்கருத்து வெளிப்படையாகத்தோன்றாமல்விடவில்லை.

* * * *

தலைவியானவள் தலைவனை நன்கு காதலிக்கிறாள். ஆனாலும், அவன் பரத்தையரின்பத்தையே விரும்பிச் செல்கின்றான்; தலைவனுடைய இந்தச்செயலுக்கு அவள் தன்னைத்தான் குறை சொல்லுகிறாள். ஏன்? அவனை இன்புறுத்த அவளால் முடியவில்லையாம்.

''வேட்டொழிவ தல்லால், வினைஞர் விளைவயலுள்
தோட்ட க்டைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்''

தலைவனுடைய நாட்டிலேயுள்ள மள்ளர்கள் மிகக்கொஞ்சம் இறைச்சியுள்ள நத்தையைச் சுட்டுப் பெரிய ஆமையின் முதுகோட்டிலே உடைத்து உண்பர் எனுஞ் செய்தியினால், தலைவன் சிறந்தவளாகிய தலைவி வீட்டிலேயிருக்க, அவளைப் பொருட்படுத்தாது சிறப்பில்லாத பொதுமகளிரிடத்துச்சென் றின்பம்நுகரும் இயல்புடையான் எனும் உள்ளுறைப்பொருள் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது.

வச்சத்தொள்ளாயிரம் சொற்பொருணயங்களும் ஓசையின்பமும் நிறைந்த ஒரு சிறந்த நூல் என்பதைச் சுவையூற்றுக்களாக விளங்கும் இந்த மூன்றுவெண்பாக்களுமே எடுத்துரைக்கின்றன வன்றோ!

1889-ஆம் ஆண்டில் நிகழ்ந்த

கச்சிக்கலம்பக அரங்கேற்ற வைபவம்

கச்சிக்கலம்பகமென்னும் சிறு நூல், காஞ்சி ஏகாம்பரநாதர்மேல் இராவ்பகதூர் பூண்டி அரங்கநாதமுதலியார் (M.A.) என்னும் பேராசிரியர் இயற்றியதாகும். இவ்வறிஞர், சென்னை இராஜதானிக்கலாசாலையில் கணிதசாத்திர விற்பன்னராக இற்றைக்கு 54-ஆண்டுகளுக்கு முன் விளங்கியவர்; நுட்பமதியினராகலின் எல்லாத்துறைகளிலும் இறங்கத்தக்க சாமர்த்தியமுடையவர்; ஆங்கிலத்திலும் வல்லவர்; தருக்கசாத்திரத்திலும் நிபுணர்; அரசியலிலும் சிறப்புற்றவர்; பிரசங்கமாரிபொழிவதிலும் இணையற்றவர்; தமிழிலும் பண்டிதர்; பிறருக்கு உபகாரஞ்செய்வதிலும் மேம்பாடுடையவர்; தமிழ்ப் பண்டிதர்களைப் பெரிதும் ஆதரித்தவர்; ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை காலத்தவர்; தமது தமிழ்ப்பற்றும் திறமும் விளங்கும்படி இவர் கச்சிப்பிரான்மீது இயற்றிய கலம்பகத்தை அரங்கேற்றும்வண்ணம் சென்னைத் தொண்டைமண்டலவித்தியாசாலை மண்டபத்தில் ஒரு வித்வச்சபைகூடியது. அச்சபையில் வீற்றிருந்தவர்களுள்,

(1) திருவாரூர் சின்னசாமிப்பிள்ளை (இவர், கிறிஸ்தவகலாசாலையில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர்; தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை குடும்பத்தைச்சேர்ந்தவர்; புரசைச் சபாபதிமுதலியார் மாணவருள் ஒருவர்.)

(2) தண்டலம் பாலசுந்தரமுதலியார் (இவர், புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியார் மாணவர்; சென்னை Tamil Translator's officeல் உத்தியோகமாயிருந்தவர்.)

(3) திருமயிலை முருகேசமுதலியார் (இவர், பச்சையப்பன் கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர்; சைவசித்தாந்த சாத்திரங்களை வரன்முறையாகப் பாடங்கேட்டவர்; பல சித்தாந்தநூல்களை அச்சிட்டவர்.)

(4) கும்பகோணம் சாமிநாதையர் (சங்கநூல்களை நன்கு அச்சிட்டுதவிய இவரைத் தமிழுலகம் அறியும்.)

(5) திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராயசெட்டியார் (இவர், நார்மல் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதராயிருந்தவர்; திருவிளையாடற் புராணவுரை, காஞ்சிப்புராணவுரை முதலியவற்றை எழுதியவர்.)

(6) சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் (இவர் குமரகுருபரர்பிரபந்தத்திரட்டு, சிவப்பிரகாசர்பிரபந்தத்திரட்டு, திருவிளையாடற்புராணமூலம், வாயுசங்கிதை முதலிய நூல்களை அச்சிட்டவர்; வீரசைவர்; பாடஞ்சொல்லுவதில் அதிநிபுணர்.)

முதலியோர் கச்சிக் கலம்பகப் பாடல்களின் சொற்சுவையையும் பொருட்சுவையையும் நன்கு எடுத்துக்காட்டிப் பாராட்டினார்களென்று அச்சபைக்கு விஜயஞ்செய்த திருமயிலைவித்துவான் சண்முகம் பிள்ளையவர்கள் இருபதுபாடல்களாற் கூறுகின்றார். அவை அச்சிடப்படவில்லை. அப்பாடல்களால் அவ்வரங்கேற்ற மண்டபத்திற் குழுமியிருந்த புலவர்பெருமையெல்லாம் விளங்குதலால் அவற்றைச் செந்தமிழ்நேயரும் படித்து ரசிக்குமாறு கீழேதருகின்றேன்.

நீடுவான் முதற்பகுதி நிலையாகி நேயமலி யன்பர் நெஞ்சிற்
கூடுவான் பழமறைகள் பாடுவான் குஞ்சிதத்தா டுக்கி மன்றின்
ஆடுவான் றனைப்பரசி யடியோர்மைப் புரந்தருள்வா னணிநீர்க் காஞ்சி
நாடுவான் புகழ்மேய ஞானப்பிர காசன்சீர் நவின்று வாழ்வாம். (1)

பார்பூத்த பல்லுயிரும் பூத்தபனி மலைபூத்த பாவை யன்று
கார்பூத்த மணிமிடற்றெம் மான்றருநெல் லிருநாழி கைக்கொண் டென்றும்
நார்பூத்த வுளநயந்தெண் ணான்கறனு மினிதாற்று நலங்கொள் காஞ்சிப்
பேர்பூத்த திருநகரைத் தன்வயிற்கொண் டதுபாலிப் பெருஞ்சீர் நாடு. (2)

இன்னநாட் டினின்மனுவு ளஞ்செழுத்துஞ் சத்திகளு ளிமய மீன்ற
நன்னுதலும் பலகலையுட் சிவகலையும் வரைதம்மு ணப்பன் கோட்டும்
பொன்னிமய மேருவுமா மறைகளுட்சா மமுநதியுட் பொன்னி யும்போன்
மன்னியசீர் வளஞ்செறியும் பூண்டிநகர் சிறந்துளது மரபின் மாதோ. (3)

இன்னநகர் வயிற்பொன்னி நாடதுசெய் பாக்கியமா மெனம திக்குந்
தன்னிகரில் சீர்த்தியலி கொற்றவன் குடிமுதல்வர் தமிழிற் சாலப் [த்
பொன்னெனநன்றெடுத்துரைக்கும்பொருவில்வேளாண்குலத்திற்புவனமுய்ய
தென்னவன்போற்றமிழ்வளர்ப்பான்அரங்கநாதத்துரிசில்செனித்தானன்றே.

ஆயதமிழ்க் கலையனைத்தும் வரம்பறக்கற் றரசபா டையுநன் றோதித்
தாயனையா னெனச்சிறந்து தன்னாட்டு மொழியினிமை தனைமிக் கோர்ந்து
பாயபல பிரபந்தத் தொகுதியுண ரார்க்குணர்வு பாலிப் பான்போன்
மாயனறி யாக்கழலாற் கோர்பிரபந் தம்புகல்வான் மதித்திட்டானல். (5)

முன்னூறுபல் புலவருளவ் வெல்லப்ப நாவலரு முதிர்ந்த தீஞ்சொற்
பொன்னனைய கவிபாடு மிரட்டையரு மிவனெனப்பொன் னிதழி பூத்த
நன்னதிச்செஞ் சடைமுடியா னேகம்ப வாணன்மே னயந்திஞ் ஞான்று
சொன்னயமும் பொருணயமுந் துதைந்தகலம் பகமாலை சொற்றா னம்மா.(6)

எந்நூலை யியற்றினரு மவைக்களத்துப் புலவரெலா மேற்ப முற்றுஞ்
சொன்னூலை யரங்கேற்றும் வழக்காக விஞ்ஞான்றத் தொடர்பு நாடிப்
பன்னூலும் வல்லாருஞ் செறியவைக்க ணசங்கை பாற வம்மா
தன்னூலை யரங்கேற்றித் தனதுபுகழ் நிறுத்தான்பிற் சாற்று மாறே. (7)

பரமனுத வியநெவிரு நாழியைப்பெற் றுமையறம்பாங் கொடுபெ ருக்கும்
பரிசெய்தி யொருவணிகன் பொருட்டேழு பதின்மரிசை பரிவி னூட்டுங்
கரவிலாத் துளுவவே ளாளர்தொண்டை மண்டலமாண் கல்விச்சாலை
வரமலிச பாமண்ட பத்துணெடும் புலவரெலா மகிழ மாறே. (8)

முன்னைஞான் றொருகுறட்கே நச்சர்பரி மேலழகர் முதலா யோர்நின்
றின்னமுத நிகர்மொழியி னுரைவரைந்தா ரென்பதவ ரெழுத்திற் கண்டாம்
இன்னபோழ் தவைக்களத்துப் பிரசங்க மழைபொழிவித் தானென் றோதத்
தன்னிகரில் புலவரெலாந் தனித்தனியின் னுரைபுகன்றார் தகவின் மாதோ()

பொலம்பூத்த விதழிநறுந் தார்பூத்த புரிசடையான் புரைதீ ரன்பே
தலம்பூத்த தெனப்புரசை வயிற்பூத்த பெருந்தவத்தான் றமியேற் இன்று
நலம்பூத்த தமிழ்மடந்தை தனைப்புணர்த்த வருளுடையா னல்லோர் காண
வலம்பூத்த வவதான மோரெட்டும் பூத்தசபா பதிவாணன்பால். (10)

கற்றாரிற் பிறந்ததனாற் பிறவாத வீடுதருங் கவினை மேவி
அற்றார்கட் கோர்புகலா மிறைவனே ரன்பனுக்கா வன்று அது
சொற்றானென் றுலகுரைக்குந்தொன்னகரிற்றோன்றியநந்தோன்றலென்றும்
பற்றாகத் தணிகைநா டியசின்ன சாமியரும் பாவ லோனும். (11)

சந்திரமோ விப்பெருமான் வன்றொண்டர் தமையுஞ்சங் கிலியால் யாத்திட்
டந்திலவன் றனக்கருளு மரும்பதியை நாடுகிற்போ னடிய னேன்பால்
நந்தலிலன் புடையான்றண் டலையுடுத்த தண்டலமா நகரா னென்றும்
வந்தனையன் பருக்குளுற்று மெழிற்பால சுந்தரனு மதிமிக் கானும். (12)

கயிலைதனையொரீஇயுமையோர்மயிலுருக்கொண்டெழிற்புன்னைக்கண்ணார்ந்
பயிலனையே யவனுரையா கமநெறியின் வழிபாடு பரிவி னாற்றும் [தம்மால்
மயிலைவளம் பதிசெய்தவ மெனவந்து மெய்கண்டான் மரபி னூல்கள்
செபிரறந்தேர்ந் தநுபூதித் திறல்வாய்ந்த முநகேசச் செம்மல் தானும். (13)

வானாட்சி யுறுபுலவர் வழுத்தினுநின் றலவாத வண்மை யானக்
கோனாட்சி யுறக்கவிதை பொழியெழிலி யன்னான்மெய்க் குரவு பூண்பான்
தானாட்சிசெந்தமிழ்க்கென் றலகுரைக்குஞ்சிறப்புடையான் றன்னேரில்லான்
மீனாட்சி சுந்தரமா லுழைக்கற்றோர் தமிலெவரும் விழைந்து காண. (14)

தீதிலொழுக்கன்பறிவேமுதலகுணங்கோட்டிகொளச்செறிவோனென்றும்
ஓதுநலம் பொலிசங்க நூலாய்ந்தெம் மோர்க்களிப்போ னொருமை நெஞ்சான்
மாதொருபா கனைப்பரவு மாண்பினான் கடன்மிசைந்த மலய வெற்பின்
மாதவனே நிகர்சாமி நாதனெனப் புகழ்சாலு மறைவ லானும். (15)

மூலவா யிரமறையு மோர்ந்துணராப் பெருந்தகைமுத் தமிழில் வல்ல
கோலவான் புலவரொடு வீற்றிருந்து தமிழாய்வான் கூடல் வைகும்
ஆலவா யடிகளரு ளியவாட லெவ்வெட்டு மடைவி னோர்ந்து
சாலவா னமுதுகைப்ப வுரைசெய்சுப்ப ராயவிருந் தமிழ ரேறும். (16)

நங்கடிருத் துறைசைவரு சிவஞான முனிவர்பிரா னலஞ்சேர் காசிப்
புங்கவனைக் கலம்பகஞ்சொ லரும்புலவன் முதலாயோர் புவிவந் தன்னான்
துங்கமலி சிகிப்பொருப்பி லுறைசிவஞா னிக்கன்பு துதைந்த தூயோன்
எங்கள்குரு மணியெனும் இராமலிங்க முனிவரனென் றியம்புங் கோவும் (17)

அவையுளா ரதிசயித்துச் சிரகரகம் பிதஞ்செய்ய வன்பு பூப்ப
நவையறுசித் தாந்தமணம் பிலிற்றவருஞ் சொற்பொருளி னயங்க டோன்றச்
சுவைமலிசெந்தமிழ்தொகுத்தோர்நான்மேற்றோள்பெய்துரைப்பத்துரிசில்
[கேள்விச்
சுவையிதுபோ லெங்குளதென் றறிஞர்வியப் பப்புகன்று சதிர்பெற்றரே. ()

வேறு

இன்ன வாறிவன் கச்சிமாக் கலம்பக மெவரு
நன்ன லம்பெற நூலரங் கேற்றிநா வலவர்
துன்னி ருங்களத் தேற்றிடச் செய்தனன் றுரிசு
மன்னு நெஞ்சினேன் சொற்றிடலாவதோ வகுத்தே (19)

பூதி கண்டிகை பொருவில்சீர்க் கம்பமற் றதற்கே
ஓது நற்கலம் பகமஃ துஞற்றுநம் அரங்க
நாத வேளவ னவிலுமந் நூனயம் விரித்த
ஏதில் சீர்ப்புல வோர்குழாம் வாழிய வினிதே. (20)

சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை.

13 படிறு யினசொல்லிப் பாழுட லோம்பிப் பலகடைச்சென்
றிடறு தொழிந்து மெழுநெஞ்ச மேயெரி யாடியெம்மான்
கடறா யினநஞ்ச முண்ட பிரான்கழல் சேர்தல்கண்டாய்
உடறா னுளபய னவசொன் னேனிவ் வுலகி னுள்ளே.

பதவுரை:—எரியாடி - தீயாடி, எம்மான் - எமது இறைவன், கடல் தாயின நஞ்சம் உண்டபிரான் - கடலின்கண் தாவியெழுந்து விடமுண்ட இறைவனாகிய சிவன், (அவனது) கழல் சேர்தல் - பாதத்தையடைதல், உடல் தான் உளபயன் - உடம்பெடுத்தமையாலாகிய பயன், இவ்வுலகினுள் ஆவ சொன்னேன் - இவ்வுலகின்கண் ஆவன கூறினேன், (ஆகையால்) படிறாயின சொல்லி-பொய்கூறி, பாழுடல் ஓம்பி - பாழாகிய உடம்பினைக் காக்க, பல கடைச் சென்று - பல தலைவாயிலிற் போய், இடறுது - இடறிவிழாது, ஒழிதும் - ஒழிவோம், நெஞ்சமே எழு - மனமே எழுந்துவா.

குறிப்புரை:—'ஓம்பி' என்றது திரிந்துநின்றது. ஒழிதும் -தும்மீற்றுத் தன்மைப்பன்மை. நெஞ்சத்தைத் தம்மொடுபடுத்தி ஒழிதுமென்றார். பல கடைச்சென்று இரத்தலென்றது செல்வர்தலைவாயிலிற்சென்று இரத்தலை. 'ஆவ' என்பது பலவறிசொல். பாழுடலென்றார் உடம்பின் இழிவையுணர்த் தற்கு. 'கடல் தாயின நஞ்சம் உண்டபிரான்' என்றது தேவர்கள் பாற்கட லில் அமுதங்கடைந்துழித் தோன்றிய ஆலகாலவிடத்தை இறைவன் நுகர்ந்து அவரைக் காத்தமையை, "ஆலாலமுண்டிலனே லன்றயன்மாலுள்ளிட்ட - மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ" என்னும் திருவாசகமும் இப்பெற்றிநோக்கியதே.

14 உலகா ளுறுவீர் தொழுமின்விண் ணாள்வீர் பணிமினித்தம்
பலகா முறுவீர் நினைமின் பரமனொ டொன்றலுற்றீர்
நலகா மலரா லருச்சிமி னரக நத்துநிற்கும்
அலகா வுறுவீ ரானடி யாரை யலைமின்களே.

பதவுரை:—உலகு ஆளுறுவீர்! மண்ணுலகை ஆளவிரும்புவீர்!, தொழு மின் - வணங்குங்கள், விண்ணாள்வீர் மேலுலகை ஆளவிரும்புவீர்!, பணிமின்- தொண்டுசெய்யுங்கள், நித்தம் பல காமுறுவீர்!—என்றும் பலவற்றையும் விரும்புவீர்!, நினைமின் - தியானஞ்செய்யுங்கள், பரமனொடு ஒன்றலுற்றீர் - இறைவனோடு இரண்டறக்கலப்பினைவிரும்புவீர்! ந(ல்)ல கா மலரால் அருச்சி மின் - நல்ல சோலையின்கண் உள்ள மலரால் அருச்சனைபுரியுங்கள், நாள் நாகத்து நிற்கும் அலகா உறுவீர்!—என்றும் நரகின்கண் பேயாக இருக்கக் கருதுவீர்!, அரனடியாரை அலைமின்கள் - சிவனடியாரை வருத்துங்கள்.

குறிப்புரை:—பரமனோடொன்றுவார் சிவார்ச்சனைசெய்தே அடைய வேண்டுதலின், பரமனொடொன்றலுற்றீர்! நல காமலராலருச்சிமின்” என்றார்; இவ்வாறு கூறியதனை,

“எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
அண்ண லார்தமை யருச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து”

எனக் கூறலானும் உணர்க. அரனென்றார் சங்காரகாலத்து எப்பொருளையும் அழித்துநிற்பதுபற்றி.

15 அலையார் புனலனல் ஞாயி றவனி மதியம் விண்கால்
தொலையா வுயிருடம் பாகிய சோதியைத் தொக்குமினோ
தலையாற் சுமந்துந் தடித்தொண் கொடித்தே ரரக்கனென்னே
கலையா னொருவிரற் றாங்ககில் லாவிட்ட காரணமே.

பதவுரை:—தடித்து ஒண் கொடித்தேர் அரக்கன் - இடிதங்கிய ஒள்ளிய கொடியையுடைய தேரையுடைய இராவணன், தலையால் சுமந்தும் - தன் தலைகளால் தாங்கியும், கலையான் - மானேந்திய சிவபிரானது, ஒருவிரல் தாங்ககில்லாவிட்டகாரணம் என் - ஒப்பற்ற விரலைத் தாங்கமுடியாதகாரணம் என்னை?, (ஆதலால்) அலையார் புனல் அனல் ஞாயிறு அவனி மதியம் விண் கால் தொலையா உயிர் - அலையோடுகூடிய நீர் தீ சூரியன் பூமி சந்திரன் ஆகாயம் காற்று நிலைபெற்ற இயமானன் என்னும் எட்டினையும், உடம்பாகிய சோதியை - உடம்பாகக்கொண்ட சிவனை, தொக்குமின் - கூடுமின்.

குறிப்புரை:— இறைவனுக்குப் புனல் முதலாய அட்டமூர்த்தமுளவாகலின் அங்ஙனங்கூறினார். “நில நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்-புலனாய மைந்தனோ டெண்வகையாப் புணர்ந்து நின்றான்” என்றதனான் அறிக. அரக்கன் என்றது இலங்கையர்கோனை. கலையான் என்றது மானேந்தி என்னும் பெயர்பற்றிக் கூறியதேயன்றி, மறைமுதல்யோகி என்பது நோக்கிக் கூறியதெனினும் அமையும். கலையானொருவிரல் தாங்ககில்லாவிட்டகாரண மென்றார், அலகிலாற்றலுடைமையை யுணர்த்துதற்கு என்க.

16 காரணன் காமரம் பாடவோர் காமரம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற தையலைத் தாங்குவர்யார்
போரணி வேற்கண் புனற்படம் போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்பட மூடி யிருந்தனவே.

பதவுரை:—போர் அணி வேற்கண் - போர்த்தொழிலைச் செய்கின்ற அழகிய வேல்போன்ற கண்கள், புனற்படம் போர்த்தன - நீராடையால் மூடப்பட்டன, பூஞ்சுணங்கு ஆர் - அழகிய தேமல்படர்ந்த, ஏர் அணி கொங்கையும் - அழகமைந்த தனமும், பொற்படம் மூடியிருந்தன - பொன்னுடையால் மூடப்பட்டிருந்தன, (ஆகையால்) காரணன் - நிமித்தகாரணனாகிய சிவன், காமரம்பாட - சீகாமரம் என்னும் பண்ணைப் பாட, ஓர் காமர் அம்பு ஊடுற - ஒரு மன்மதனம்பு தன் உடம்பில் ஊடுருவிச்செல்ல, தன் தார் அணங்கு ஆக - தன் மாலையைவேண்டி வருத்தமுடையவளாக, தளர்கின்ற தையலைத் தாங்குவர் யார்?—வருந்தாநிற்கின்ற பெண்ணைத் தாங்காநிற்பவர் யார்? ஒருவரும் இலர் என்றவாறு.

குறிப்புரை:—போர்அணிவேற்கண் என்பதற்குப் போரினை அழகுசெய்கின்ற அழகிய வேல்போலும் கண் எனினும் ஆம். இது தலைவி துயரைப் பாங்கியொடுங் கூறல். 'கண் புனற்படம் போர்த்தன' என்பதும், 'பூஞ்சுணங்கார் ஏரணிகொங்கையும் பொற்படம் மூடியிருந்தன என்பதும் கண்ணீர்விடலும் தேமல்படர்ந்தமையும் உணர்த்திநின்றன. காமர் இழித்தற் கண் பலர்பாற்கண்வந்தது. 'யார்' என்னும் வினாவினைக்குறிப்பு ஈண்டு இன்மைகுறித்துநின்றது; இதனை, "யாஅருலகத்தோர் சொல்லில்லார்" என்புழியும் ஓர்ந்துணர்க.

17 இருந்தன மெய்திய நின்றுந் திரிந்துங் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு போகநெஞ் சேமடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன் புண்ணியல் சூலத்தெம்மான்
திருந்திய போதவன் றனே களையுநந் தீவினையே.

பதவுரை:—நெஞ்சே! - மனமே!, இருந்தனம் எய்தியும்-பெருஞ்செல்வமடைந்தும், நின்றும் - நிலைத்தும், திரிந்தும், கிடந்து அலைந்தும் - கிடந்து வருந்தியும், வருந்தியவாழ்க்கை - வருந்தியவாழ்க்கையினை, போக தவிர்த்திடு - போக ஒழித்துவிடு, (இவ்வாறு செய்யின்) மடவாள் பொருந்தியபாகத்துப் புண்ணியன் - உமைதங்கிய பாகத்தையுடைய இறைவன், புண்ணியல் சூலத்து எம்மான் - புண்தங்கிய சூலப்படையினையுடைய எம் தலைவன், அவன்தானே திருந்தியபோது நம் தீவினைகளையும்-அவனே நமக்குச் சத்திநிபாதம்வந்தபோது நமது தீவினைகளை ஒழிப்பான்.

குறிப்புரை:—முற்றத்துறந்தார்க்கே சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய அந்தமிலின்பத்தழிவில்வீட்டை இறைவன் தருவனென்பது இதனாற் பெறப்பட்டது. மடவாளென்பது உமையம்மையை. அவனே என்புழி ஏகாரம் பிரிநிலைக்கண்ணது.

18 தீவினை யேனைநின் றைவ ரிராப்பகற் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன் வெறுத்துவிட் டேன்வினையும்
ஓவின துள்ளந் தெளிந்தது கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கண னாரணன் பாதங்களே.

பதவுரை:—பாவின செஞ்சடை முக்கணன் - பரந்த சிவப்புச் சடையையும் மூன்று கண்களையும் உடையான், ஆரணன் - வேதப்பொருளானவன், (அவனுடைய) பாதங்கள் - திருவடிகளை, கள்ளம் கடிந்து அடைந்தேன் - வஞ்சமொழிந்து அடைந்தேன், (ஆகையால்) தீவினையேனை - தீவினையில் மூழ்கிய என்னை, ஐவர் இராப்பகல் நின்று செத்தித் தின்ன - பஞ்சேந்திரியங்கள் இரவும் பகலும் மிக வருத்தலான், மேவின வாழ்க்கை வெறுத்தேன் வெறுத்துவிட்டேன் - பொருந்திய இல்வாழ்க்கையை வெறுத்து மிக ஒழித்தேன், வினையும் ஓவினது - வினையும் நீங்கியது, உள்ளம் தெளிந்தது - மனமும் தெளிவடைந்தது.

குறிப்புரை:—தின்ன இலக்கணை. செத்தித்தின்ன - ஒருபொருட்பன்மொழி. ஐவரென்றது தொகைக்குறிப்பு. தின்ன எனச் செயவெனெச்சம் காரணப்பொருள்பயந்துநின்றது. உள்ளம் ஆகுபெயர்.

19 பாதம் புவனி சுடர்நய னம்பவ னம்முயிர்ப்போங்
கோத முடுக்கை யுயர்வான் முடிவிசும் பேயுடம்பு
வேத முகந்திசை தோண்மிகு பன்மொழி கீதமென்ன
போத மிவற்கோர் மணிநிறந் தோற்பது பூங்கொடியே.

பதவுரை:—பாதம் புவனி - சேவடி நிலம், நயனம் சுடர் - கண்கள் முச்சுடர், பவனம் உயிர்ப்பு - உயிர் காற்று, உடுக்கை ஓங்கு ஓதம்-உடுக்கை ஓங்கிய கடல், உயர்வான் முடி - பரமாகாசமே முடி, விசும்பே உடம்பு - ஆகாயமே திருமேனி, வேதம் முகம் - மறைகளே திருமுகம், திசை தோள் - திக்குகளே புயம், மிகு பன்மொழி கீதம் - மிக்க பலமொழிகள் சங்கீதம், பூங்கொடியே!-பூங்கொடிபோலவாளே!, இவற்கு ஓர் மணி நிறம் தோற்பது என்னபோதம் - இச்சிவபிரானுக்கு ஒப்பற்ற மணிநிறத்தில் தோல்வித்தானம் அடைவது என்ன அறிவு.

குறிப்புரை:—இது இறைவனது விராட்டுருவங்கூறியது. இதனை வடநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. உயர்வானென்றது பரமாகாசத்தையும், விசும்பென்றது இடைவெளியையும். பூங்கொடி அன்மொழித்தொகை.